கோபாலப்புரத்துக் கோகிலமே!...
கொற்றவன் கதறியழப் போய் விட்டாயா?.....

இந்தித் திணிப்புப் போரில் களங்கள் கண்ட கழகக் காளை தமிழ்மொழி காக்கும் போர்ப் படையின் மாணவ மறவர்! சட்டக் கல்லூரியில் கழகத்திற்கென மாணவப் பட்டாளத்தை உரு வாக்கிக் காட்டிய மாண்பாளர்! திராவிட இயக்கத் தில் திகட்டாத தென்மொழி எழுத்தாளர்! தமது எழுத்துப் பணியில் ஆள வந்தார்களுக்கு அடிப் பணியா அரிமா! தவறு இழைப்போரைத் தமது எழுதுகோலால் தண்டிப்பதில் தலை தாழாச்சிங் கம்! வரிசை கட்டி வந்த வார்த்தைப் பகைவர் களைத் தமது எழுதுகோல் வாளால் பந்தாடிய வணங்காமுடி! நெருக்கடி நிலையில் நிலை குலையா நெஞ்சக் குன்றம்! சர்வாதிகாரிகளின் சட்டமன்றக் கூண்டில் ஏற்றப்பட்ட போதும் முரச மாய் ஒலித்த சங்க நாதம்! ஜனநாயகம் காக்க வலிமை மிகு வாதங்களால் முரசொலித்து வென்ற வல்லமையாளர்! தமது சித்திர எழுத்துக் களால் சீர்திருத்தம் கண்ட சிங்கார நடையாளர்; அன்றாடச் செய்தியாய் அரங்கேற்றும் உரையா டல்களில், கட்டுரைகளில், நாடகங்களில் நக்கல் நையாண்டி கலந்து தந்த நவரச நாயகர்! கருத் தோவிய எழுத்துக்களால், எதிரிகளைக் காயப் படுத்தாமல் "நச்" என்று, நாகரிக விமர்சனம் செய்து வந்த சிலந்தியார்! பெரியார், அண்ணா வின் பகுத்தறிவு நடைபயின்ற பண்பாளர்! சனா தன எதிர்ப்புச் சண்டமாருதப் போராளி! தீந்தமிழர் போற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்! உணர்வு மிக்க பல பரப்புரைச் செய்திகள் தந்து கொண்டி ருந்த, உறக்கம் கொள்ளா ஊடகவியலாளர்! அனைவரிடத்தும், அரவணைப்பு, அன்புப் பாராட் டிப் பழகும் பரந்த குணத்தால் கடலைப் போல அமைதியானவர்! அச்சமில்லா அறிவினில் அடக் கம் நிறைந்தவர்! சிட்டுக்குருவிகள் கூடு கட்டும் அவர் அடிக்கடி பேச்சினிடையே முறுவலிக்கும் மோனலிசா புன் சிரிப்பாளர்!

பேரறிஞர் அண்ணாவின் நட்பில் பெருமை கொள்ளத்தக்க பிழையிலாச் சீடர். காவிரிக் கரை நீண்டெழும் தஞ்சை மண் தந்த கலைஞரின் மரு மகனார்! முத்தமிழ் அறிஞரின் மகளார் செல்வி பெற்ற வாழ்வியல் இணையர்! மூச்சு தோறும் முன்னேற்றக் கழகக் கொள்கையைப் பரப்பி வந்த முரசொலி மாறனாரின் ஆருயிர் இளவல்! தளபதியாரின் கருத்துப் பரிமாற்றங்களுக்கு வடி காலாக இருந்த வாஞ்சைமிகு வசிட்டர்! கலைஞர் குடும்பத்தில் எஞ்சிய கலைஞர்!கொடிமரம் காத் துக் கொள்கை வழி நின்ற கோபாலபுரத்துக் கொஞ்சும் புறா! இப்படிப் பன்முகம் படைத்த அண்ணன் முரசொலி செல்வம் என் வாழ்க்கை யில் கிடைத்த ஐம்பது ஆண்டுக் கால அருமைச் செல்வம் அல்லவா?

"சர்க்காரியா கமிஷன் ஒரு சூழ்ச்சி வலை" எனும் நூலும், "சில நினைவலைகள்" எனும் நூலும், அவர் தீட்டிய கழக வரலாற்றில் வைரக் கல் பதிவின் கால வடுக்களின் அடையாள வழி காட்டி! கழகக் கருவூலம் மறைந்து விட்டாரே! கதற, கதறக் கழகத்தவர் இதயத்தில் மரணம் எனும் பேரிடி இறங்கி விட்டதே! இயற்கைத் தாய் மடியில் பொன் சிறகு போர்த்தி உறங்கச் சென்று விட்டாரே! கிளை பரப்பி, இலை, தளிராய் விரிந்து, பூ, பிஞ்சு, காய், கனியாய் குலுங்கி, விழுது விட்ட விருட் சத்தின் வேரானது மண்ணில் மறைந்து வாழ்வது போல் வாழ்ந்து வந்த என் அண் ணனை நானும், கழகமும் இழந்து விடோமே!

நாள் தோறும் அண்ணன், தம்பிகள் நாங்கள் இரண்டு, மூன்று முறையாவது தொலைப்பேசி அழைப்பில் பேசிக் கொள்வோமே!தலைவர் பேச் சைக் கேட்டீங்களா?நிகழ்ச்சிக்குச் சென்று இருந் தீர்களா? படித்தீர்களா? வேறு என்ன செய்தி? என் றெல்லாம் கேட்டுக் கேட்டு மனம் மருகுவாரே. இப்பொழுதுதான் என்னிடம் தலைவர் ஸ்டாலின் பேசினார்... என்றெல்லாம் சொல்லுவாரே! இறக் கும் முன்னர் இரவில் கூட ஆந்திர நடிகர் ஒருவர் பேசிய பேச்சின் விவரம் என்ன? அதற்குத் துணை முதல்வர் உதயநிதி அளித்த பதில் விவரம் என்ன? என்றெல்லாம் என்னிடம் கேட்டு, அவர் அறிந்து வைத்திருந்த செய்திகளுக்கு நான் சரியா கப் பதில் சொல்கிறேனா என்று வினவினாரே?... அடுத்து வரும் முரசொலியில் கட்டுரைக்குத் தயா ரானாரே?... ஆனால் காலத் தேவதையின் கோரக் கரங்களின் பிடியில் படுக்கையிலேயே, அவரின் பூ போன்ற மென்மையான உயிரைப் பறித்துச் சென்று விட்டதே!

சிலந்தியார் எனும் பேரில் எழுதும் கட்டுரை ஒன்றினை முரசொலி ஏட்டில் "நிகழ்ச்சி ஒன்றின் மேடையில் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர் கள், முன்னாள் ஆந்திரா புதுவை ஆளுநர் தமி ழிசை அவர்களை நடத்திய விதம் குறித்து, கடந்த ஜூன் மாதம் 19ஆம் தேதி "பதவிப் படுத்தும் பாடு" என்ற தலைப்பில் அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் எழுதியிருந்தார். அதைப் படித்து விட்டுச் செல்பேசியில் நான் பேசினேன். பிறகு அவர் எழுத்தைக் கண்டு பெருமைப்பட்ட நான், அவ ரைப் பற்றியும் அவரது எழுத்தைப் பற்றியும் கவிதை ஒன்றைத் தீட்டி அனுப்பி இருந்தேன்.

அதனை அவர் படித்துவிட்டு, "நன்றி. வணக்கம் .சிறப்பான கவிதை. அந்த வரிகளுக்கு ஏற்புடை யவனாக இருந்திட நான் முயற்சி செய்கிறேன். நன்றி." என்று எனக்குப் பதில் தகவல் அளித்து இருந்தார். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக் கால நட் பில் நான் எதை மறப்பது? எதை விடுப்பது? இதோ அவரைப் பற்றி நான் எழுதிய அந்தக் கவிதை....

உரம்பல போடு கின்றீர்;
உளத்திடைக் கழகம் ஓங்க!
முரசொலி செல்வம் என்ற
முன்னேற்றக் கழகச் சொத்தே!
தரமிகு கருத்துக் கோலத்
தாக்கத்தை ஏற்ப டுத்தும்
வரம் தரும் எழுது கோலால்
வாழ்வெல்லாம் இனிக்கின் றீரே.!

அரசியல் பகைவர் தம்மை
அநீதி இலக்க ணத்தைப்
புரட்டியெ டுக்கும் அடிதான்!
புயல்தான்! பூகம் பம்தான்!
புரவியின் வீறு வீச்சால்
புண்ணாக்கும் உன்றன் சாட்டை!
புலம்பிடு எதிரிக் கூட்ட
வரம்பினைக் தகர்க்க காண்போம்!
வாய்மையால் வெல்வீர் வாழ்க!

நரம்பொலி விரல்கள் மீட்டும்
நாதத்தின் வீணை அன்ன;
பரம்பொருள் பெரியார், அண்ணா
பாதையை நெஞ்சில் போற்றிக்
கரம்பற்றிக் கலைஞர் நின்றார்!
கண்ணேஎம் செல்வம் அண்ணா!
சரமல்லிப் பூவின் வாசம்
தந்திட எழுது கின்றீர்!

எத்தனை வீச்சு! தங்கள்
எழுத்தெல்லாம் கழக மூச்சு!
முத்தினைக் கோத்த மாலை
முகவரி அழகே! என்றும்
சொத்துதான் இயக்கப் பாட்டே!
செகமது தழைக்க என்றும்
வித்தூன்றி வளரச் செய்யும்
விளைநெல் கழனி வார்ப்பே!

விரல்வலி யெடுக்க நாளும்
விழிஇரு பாவை நோக
முரசொலி ஏட்டில் எழுதி
முழக்கத்தை எழுப்பு வாய்நீ!
குரலொலி நாளும் வேண்டும்;
சிலந்தியார் எழுத்து கண்டே
கரவொலி எழுப்பு வாரே
கண்ட நம் தோழர் எல்லாம்!

சரவெடி போன்ற சீறிச்
சிரிக்கின்றீர்! உறுமு கின்றீர்!
சுரம்வர நைய மெல்லச்
சமயத்தில் புடைக்கின் றேரே!
சிரந்தாழ இழுத்துக் கையில்
குட்டவும் செய்கின் றீரே!
மரமண்டை மனித ருக்கு
மந்திரிக் கவும்செய் கின்றீர்!

கவிஞர் தமிழ்தாசன்
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்

சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று முன்தினம் (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, திரைப்பட நடிகர் விஜயகுமார், அவரது மகன் அருண் விஜய் மற்றும் குடும்பத்தினர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினர்.

சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று முன்தினம் (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் தலைவரும், திரைப்பட நடிகருமான வி. ராஜேஷ் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

ஒன்றியச் செயலாளர் - ஊராட்சி மன்றத் தலைவர் அ.ம.துரை வீரமணி தலைமையில்

அயப்பாக்கம் ஊராட்சியில் ரூ. 57 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைக் கட்டிடம்!

மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி அடிக்கல் நாட்டினார்!

சென்னை, அக். 13 - சென்னை தெற்கு மாவட்டம், வில்லி வாக்கம் தெற்கு ஒன்றி யம், அயப்பாக்கம் ஊராட்சியில், மதுரவா யல் சட்டமன்ற உறுப் பினர் நிதியில் இருந்து 57 லட்சம் மதிப்பீட் டில் கூடுதல் வகுப் பறை கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டுதல் விழா அயப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவரும், வில்லி வாக்கம் தெற்கு ஒன் றிய கழகச் செயலாளரு மான அ.ம.துரை வீர மணி தலைமையில் நடைபெற்றது.

மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கண பதி வகுப்பறை கட்ட அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர் கரு ணாகரன், உதவி தலைமை ஆசிரியர் ஜானகிராமன், பொதுப்பணித்துறை பொறியாளர்கள் தேவன், பாஸ்கரன், கே.சங்கர் மற்றும் வட் டார வளர்ச்சி அலுவ லர் ப.ராஜேந்திரன், ஒன்றிய கவுன்சிலர் இரா.வி னோத், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஏ. எம்.யுவராஜா மற்றும் வார்டு உறுப்பினர்கள் ஏ.பி.பாபு மாறன்கு மார், செல்வகுமார், ஜி.சண்முகம், கரன் கிங், ஏ.எஸ்.மூர்த்தி, சுதாகர், மாரி செல்வம், செல்லதுரை, சேகர், செண்பகவல்லி, ஷர் மிளா, கவிதா, ரேவதி ஸ்ரீதர், ராபர்ட், வெங்க டேசன், கண்ணன், மற்றும் ஆசிரியர் பெரு மக்கள் மற்றும் மாணவ மக்கள் கலந்து கொண் டனர்.